புலவர் போற்றும் புரவலர்

# சேர். பொன்னம்பலம் இராமநாதன்

அவர்கள்



16-4-1851 26-11-1930

புலவர் போற்றும் புரவலர்

# சேர். பொன்னம்பலம் இராமநாதன்

அவர்கள்

## 125 ஆவது ஐயந்தி விழா

*

தொகுத்தவர்:

க. சி. குலரத்தினம்

*

— வெளியிட்டவர் —

மில்க்வைற் உரிமையாளர்

திரு. க. கனகராசா ஜே.பி.

16–4–1976

# சேர் இராமநாதன் அவர்கள்

சேர் இராமநாதன் அவர்கள் இன்றிருந்தால் அவருக்கு 125 ஆண்டுப் பராயமாகும். அவர் பொன்னம்பலத் தர்மவான் வழிவந்த பொன்னம்பல முதலியாரின் இரண்டாம் மைந்தன். மூத்தவர் குமாரசுவாமி, இளையவர் அருணாசலம். மூவரும் இலங்கைச் சட்டசபையை அலங்கரித்து ஈழநாட்டவருக்கு இணையில்லாத இன்றியமையாத சேவை செய்தவர்கள்.

சேர் இராமநாதன் அவர்கள் புகழோடு தோன்றிப் புலவர்கள் போற்ற வாழ்ந்தவர்.

அவர் தோற்றம்: 16-4-1851
மறைவு: 30-11-1930

சேர் இராமநாதன் 27-8-1879 முதல் 30-10-1930 வரை இலங்கைச் சட்டசபையில் அங்கத்தவராய் இருந்தார். அவர் நியமன அங்கத்

தவராயும், உத்தியோக அங்கத்தவராயும் தெரியப்பெற்ற அங்கத்தவராயும் இருந்தவர். அவர் 1910ஆம் ஆண்டு தொடக்கம் 1921ஆம் ஆண்டு வரையும் முழு இலங்கையினதும் முதலாவது தெரியப்பெற்ற அங்கத்தவராய் இருந்தார். அந்தச் சிறப்பு இலங்கையில் வேறெந்த அரசியல் தலைவருக்கும் என்றும் கிடைக்காத பெரும் புகழாகும்.

சேர் இராமநாதன் சட்டசபை அங்கத்தவராய் இருந்ததோடு பதினைன்கு ஆண்டுகள் சட்ட அறிஞர் நாயகமாகவும் சேவை செய்தார். அவர் வகித்த உத்தியோகம் அவராற் சிறப்படைந்தது என்பர். சட்ட அறிஞர் நாயகமாகக் கடமையாற்றிய காலத்தில் அவர் சட்டத்துறை நாயகமாகவும் பலமுறை கடமையாற்றியுள்ளார். சட்டத்தரணிகளுக்குச் சிக்கலாய் இருந்த அலுவல்களை இராமநாதன் அவர்கள் கோவையாக்கி ஒழுங்குசெய்தார்.

சேர் இராமநாதன் கல்வித்துறையில் செய்த சேவை அளப்பரியது. சைவ விருத்

தியா விருத்திச் சங்கம் ஏறக்குறைய இருநூறு பாடசாலைகளை ஆரம்பித்து நடத்தியது. சைவ விருத்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராயும் இருந்து கல்வித்தொண்டு செய்துள்ளார். அவர் பெண்களும் ஆண்களும் வசதியான சூழலிலமர்ந்து நல்ல முறையிற் கல்வி கற்றல் வேண்டும் எனக்கருதி சுன்னுகத்தில் மருதனு மடத்தில் பெண்களுக்கான இராமநாதன் கல்லூரியையும், திருநெல்வேலியில் ஆண்களுக்கான பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவினுர். கல்லூரிகளை நிறுவியதோடுவிடாது சிறந்த கல்விமான்களாகிய ஆங்கிலேயர், வங்காளிகள், மலையாளிகள், இந்தியர் ஆகிய ஆசிரியர்களையும் பிறநாடுகளிலிருந்து வரவழைத்துக் கற்பிக்க வசதி செய்தார்.

புறச்சமயங்களில் வெறுப்போ காய்வவோ இல்லாத இராமநாதனவர்கள் சைவ சமயத்தில் நிரம்பிய பற்றுள்ளவர். தம் தந்தையார் பொன்னம்பல முதலியார் செங்கட்டியாற் கட்டிய கொச்சிக்கடை பொன்னம்பல

வாணேசுவரர் கோயிலைக் கருங்கல்லால் கட்டித் தெய்வீக திருவுருவங்கள் பலவற்றை உருவாக்கி அங்கே எழுந்தருளச் செய்துள்ளார். தாமே இந்தியா, இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தைப் பற்றிச் சுத்தமான ஆங்கிலத்தில் பேசிக் கேட்போரைத் தம்பால் ஈர்த்துப் புகழீட்டினார்.

ஔவையார் அருளிய ஆத்திசூடியை நன்கு ஆராய்ந்து அதற்கு ஆத்திசூடி மந்திர விளக்கம் என்னும் நூலை இயற்றியும், பகவத் கீதையை நன்கு பயின்று அதற்கு அரிய பெரிய விளக்கமும், கிறிஸ்தவ சமய நூல்களில் யோன் சுவிசேசங்களுக்கு விளக்கமும் எழுதிப் புகழ் பெற்றார். இன்னும் அருள்பராநந்த யோகி என்னும் அறிஞரைச் சார்ந்து சைவ சித்தாந்த தத்துவ நுட்பங்களை நன்கறிந்து திருவாசகத்தில் பெரிதும் ஈடுபாடுடையவராய் முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு எனும் பாடலை என்றும் எங்கும் எடுத்துக்கூறும் இயல்பினராய் வாழ்ந்தார்.

செந்தமிழ்த் தொண்டு செய்வதில் ஈடுபா டுடையவராய் மகாலிங்கசிவம், நவநீத கிருஷ்ண பாரதியார் திரு. சோமசுந்தரம் முத லான அறிஞர்களைத் தம்பால் வரவழைத்துச் சேவையில் ஈடுபடுத்தித் தாமும் அவர்களோடு கலந்துரையாடும் வழக்கத்தையுடையவரா யிருந்தார். தமிழகத்தில் சென்னை சைவ சித் தாந்த சமாஜத்தின் ஆரம்பத்துக்கு உதவியா யிருந்து அதன் ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியும் புலவர்களை ஆதரித்தும் வந்தார். இன்னும் மகாமகோபாத்தியாய சுவாமிநாத ஐயர் அவர்கள், மறைமலை அடிகள் முதலான பேரறிஞர்களுக்கு அவ்வப்போது ஆவன செய்து அவர்தம் ஆராய்வுகளுக்கு ஆதர வளித்து வந்தார். தமிழகத்தில் சிதம்பரம் முதலான திவ்வியத் தலங்களுக்குக் காலந் தோறும் யாத்திரைசெய்து வணங்கிக் கோடைக் கானலில் தமக்கென ஓர் உறை விடம் அமைத்து அருகே ஒரு சிவாலயமும் அமைத்து அங்கு தம் ஓய்வுகாலங்களில் அமை தியை நாடியும் வாழ்ந்தார்.

சேர் இராமநாதன் விவசாயத்தில் ஈடு பாடு கொண்டவர். மிரிகம, கிளிநொச்சி முதலான இடங்களில் பெரிய தென்னந்தோட்டங்களையும், வயல் நிலங்களையும் வாங்கிப் பிற்காலத்தார் பயன்படுத்தும் வண்ணம் விட்டுள்ளார்.

இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணியார் காலத்து முதன் மந்திரியார் கிளாட்ஸ்ரோனுக்கு நிகரானவர் இராமநாதன் என்று சிங்கள அரசியல் தலைவர்கள் மதிக்க வாழ்ந்து அரசியற் சேவையும் சமூகத் தொண்டும், கல்விப் பணியும் செய்த இராமநாதனைப் போல இன்னொருவரை இலங்கை இன்னும் தான் காணவில்லை.

சேர் இராமநாதன் அமெரிக்காவில் சைவ சமயத்தைப் பரப்பிய சீர்மையை மைறன் பெல்ப்ஸ் வெகுவாகப் பாராட்டியுள்ளார். இராமநாதன் புலவராயும், புரவலராயும், சட்டவாதியாயும், கல்விவிற்பன்னராயும்,

பேச்சாளனும், எழுத்தாளனும், வள்ள லாயும், அரசியல் தலைவனும், தத்துவ ஞானி யாயும், தீர்க்கதரிசியாயும், யோகியாயும் இலங்கையின் முடிசூடா மன்னனாய் இருந் தார். அவரின் சிறப்பியல்புகளை நவநீத கிருஷ்ண பாரதியார், மறைமலையடிகளார், அரசன் சண்முகனார், மட்டுவில் பொன்னம் பல பிள்ளை, சோமசுந்தரப் புலவர், பண்டித மணி கணபதிப்பிள்ளை முதலானோர் புகழ்ந்து பாடியுள்ளனர். இவர்கள் பாடல்களுள் அர சஞ் சண்முகனார் அந்தாதித் தொடையில் பாடிய பாடல்கள் வருமாறு:

1. கல்வியினுற் செல்வத்தா லீகையினு லோகையினுற்
கருணை தன்னுல்
நல்வினையால் யோகத்தான் ஞானத்தான் மோனத்தா
னலஞ்சேர் மாட்சி
சொல்வகையிற் பல்லோர்பாற் கேட்டதன்றி நின்வயிற்போற்
றுகக்கண்டார் யார்
செல்வமலி யிலங்கையில் வாழ் சுயராம நாதனெனுந்
திருப்பே ரோனே!

2. திருப்பேராத் தவமுடைய செம்மலே சனகனுழைத்
தெய்வஞானம்
விருப்பேறார் கல்வியொடு செல்வமுமிக் குளவெனினு
மெய்த்த வத்துக்
கருப்பேரா சயங்கடந்த சுகன்முதலோர் சில்லோரே
கண்டின் புற்ருர்
பொருப்பேரா தரத்தானீ பல்லோரை யுய்வித்துப்
புகழ்பெற்ருயே!

3. புகழ்பெற்ற சங்கரரும் பரதகண்டத் தார்க்கன்றிப்
புகன்ற தில்லை
அகல்வானத் தாதவனும் நம்பகலிற் பார்த்தறியா
அமெரிக் காவும்
தகவுடைய பிறநாடு நீசென்று ஞானமழை
தழைப்பப் பெய்தாய்
மிகவுடைய நின்சீர்த்தி யெம்மனோ ரொருநாவால்
விளம்பற் பாற்றோ!

4. விளம்புவதென் ஞதிநரர் மொழியாய தென்மொழியில்
விண்ணோர் போற்றும்
வளம் படைத்த வடமொழியி லாங்கிலத்தில் புலமைநிறை
மாண்பு பெற்றே
உளம்படைத்த மும்மொழிக்கும் வரம்பாதி யாழியென
வுற்ற நின்பாற்
குளம்படைத்த நீரன்றோ யாம்படைத்த கல்வியெலாங்
கூறுங் காலே!

5. கூறுவர்பொய் யுலகமெனப் பிறர்பொருளைக் கொள்ளை கொளக்
கூசா ரீகைக்
கேறுகரு முகிலென்பர் கடுகளவு மிரந்தார்க்கொன்
றீயார் வஞ்ச
வீறுகொடு பலர்திரியக் கண்டுமனம் வெறுத்துன்னை
மேவி நிற்பான்
மாறுபடா வாக்குமுயர் வண்மையுந் தன்மையுங்கண்டு
மகிழ்ந்திட் டேனே!

6. மகிழ்வொடுதே வாலயபா லனமுதலாப் பலவறமும்
வயங்கக் கண்டேன்
முகிலனைய கொடைகண்டேன் முராரியென யோகநிலை
முயங்கக் கண்டேன்
மகிதலத்தோர் விருப்புவெறுப் பிவையுனக்கில்லெனக்குறை
வகையுங் கண்டேன் சொல்
விகிதமுட னவ்விரண்டும் சமனெனக் கொள் மேன்மையினு
மிக்கோன் நீயே!

7. மிக்க நினைப் பிரிந்தென்னூர் செலவஞ்சி யானிருந்தும்
விடாதா லூழும்
பக்கலுறு கற்றோரைத் தீர்தலினும் தீப்புகுதல்
பார்க்கி னன்றென்
றக்கழகத் துறுபுலவர் சொன்மொழியு மென்மனத்தை
யலைத்த தையா
இக்கணமே நினைப்பிரியா வென்னுளத்தை நீபிரியா
வியல்பீ வாயே!

8. வாய்மைநிறை கற்பிலருந் ததியுமுயர் கல்வியில் வெண்
மலர்வாழ் மாதுஞ்
சேய்மையுறு புகழ்குணத்தி லன்பினில்வா சுகியுமெனச்
சிறந்து வாழும்
தூய்மையுறு மம்மைலீலாவதியா நன்மனைசேய்
சுற்றத் தோடும்
வாய்மைபுகல் பெருவள்ளால் பல்லாண்டு நீடூழி
வாழி வாழி!

உங்கள் உடம்பு, உடை, உறைவிடம்
தூய்மைபெற

# மில்க்வைற் உற்பத்திகள்

- ★ மில்க்வைற் நீலசோப்
- ★ நியூ மில்க்வைற் சோப்
- ★ மில்க்வைற் பார் சோப்
- ★ மில்க்வைற் சலவைப் பவுடர்
- ★ மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
- ★ நீம் வாசனை சோப்
  (வேப்பெண்ணெய் கலந்தது)
- ★ நீம் சுகாதார தூபம்
- ★ ஒலிவ் ஸ்நானப் பவுடர்

எங்கும் கிடைக்கும்! எல்லோரும்
விரும்புபவை!!

சோப் மேலுறைகளுக்குப் பரிசுகள் உண்டு.

---

## மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி: 36063


---


சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.